பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

01 03 2026 SUNDAY 6 45 AM

**வணக்கம் - மாநில செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

- தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டுகிறார்.
- வளைகுடா நாடுகளில் நிலவி வரும் பதற்றமான சூழல் கவலையளிப்பதாக உள்ளது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
- தமிழ் மொழி மற்றும் தமிழ் கலாச்சாரத்தின் மீது பிரதமர் கொண்டுள்ள பக்தியும், அன்பும் தமிழர்கள் அனைவருக்கும் பெருமை அளிப்பதாக உள்ளது என்று மாநில ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.
- ரயில் வழித்தடங்களில், வன விலங்குகள் விபத்துக்குள்ளாவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு. ராஜ கண்ணப்பன் கூறியுள்ளார்.
- உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று வெஸ்ட் இண்டீஸை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

நேற்றிரவு சென்னை விமான நிலையம் வந்தடைந்த அவருக்கு ஆளுநர் திரு ஆர் என் ரவி, மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி, பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் வரவேற்பு அளித்தனர்.

புதுச்சேரியில் இன்று காலை, 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன், முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

பின்னர், மதுரை செல்லும் அவர், 4 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

பல்வேறு ரயில்வேத் திட்டங்களையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

பின்னர், தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக் கூட்டத்திலும் பிரதமர் உரையாற்றுகிறார்.

பிரதமரின் தமிழகப் பயணம், மாநிலத்தில் உள்ள விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், பழங்குடியினர், தொழில்முனைவோர், தொழில்துறைத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்துப் தரப்பினருக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பிரதமரின் தொலைநோக்கு பார்வை, கொள்கைகள் போன்ற வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் மீது பிரதமர் கொண்டுள்ள பக்தியும், அன்பும் தமிழர்களாகிய நம் அனைவருக்கும் பெருமை அளிப்பதாக உள்ளது என்றும், இந்திய நாகரிகத்தின் மீது காலத்தால் அழியாத இடத்தை நிலைநிறுத்தியுள்ளது என்றும் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர். எல் முருகன் விடுத்துள்ள சமூகவலைதள பதிவில், தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் நல்லாட்சி மலர அடிக்கல் நாட்ட வருகை தரும் பிரதமர் திரு நரேந்திர மோடியை தமிழக மக்கள் சார்பாக அன்புடன் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைவதாக கூறியுள்ளார்.

உலக நாடுகளிடையே, தமிழின் பெருமையை தொடர்ந்து எடுத்துரைத்து வரும் பிரதமர் திரு நரேந்திர மோடியை வரவேற்பதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள், ஈரான் மீது தாக்குதல் நடத்தியுள்ளதையடுத்து, மேற்கு ஆசிய நாடுகளில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

டெஹ்ரான் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், ஈரான் தலைவர் திரு. □ யத்துல்லா அலி காமினியின் அலுவலகம் அருகே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பின் மீதான ஈரானின் அச்சுறுத்தல் காரணமாக, அந்நாட்டின் மீது ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்கா அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலில், 201 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 700-க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகளின் ராணுவ நிலைகள் மீது ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஈரான் நாட்டின் வான் எல்லைகள் மூடப்பட்டுள்ளதாகவும், இணையதள சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஈரான் நடத்தியுள்ள தாக்குதலுக்கு கத்தார், குவைத் நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கத்தார் மற்றும் குவைத் நாடுகளுடன் அங்குள்ள சூழல் குறித்து வெளியுறவு அமைச்சர் திரு ஜெயசங்கர் ஆலோசனை நடத்தினார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வளைகுடா நாடுகளில் நிலவி வரும் பதற்றமான சூழல் கவலையளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து அந்தந்த நாடுகளின் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியதாகவும், இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அந்த நாடுகள் உறுதி அளித்துள்ளதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளில் உள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று அபுதாபியில் உள்ள இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

தேவையின்றி வெளியே வர வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

துபாயில் உள்ள தூதரகம் தொடர்ந்து செயல்பட்டு இதுதொடர்பான தகவல்களை வெளியிட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் தங்கியுள்ள இந்தியர்கள் அங்குள்ள இந்தியத் தூதரகத்தின் ஆலோசனைகளை பின்பற்றுமாறும் அறிவுத்தப்பட்டுள்ளனர்.

அந்நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய சுற்றுலாப் பயணிகள், வர்த்தகர்கள், செய்தியாளர்கள் உட்பட அனைத்து இந்திய வம்சாவளியினரிடமும் தொடபு கொண்டு வருவதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் உள்ள இந்தியர்கள், தேவையற்ற பயணத்தைக் தவிர்த்து பாதுகாப்பாக இருக்குமாறு டமாஸ்கஸில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், வளைகுடா நாடுகளில் வசிக்கும் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து கவலை கொண்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளதாகவும், நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தமிழக அரசு தயாராக உள்ளது என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

வளைகுடா நாடுகளில் உள்ள தமிழர்களின் அவசர உதவிக்கு, மாநில அரசின் சார்பில் 24 மணிநேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, ஈரான் - இஸ்ரேல் இடையே போர் நிலவி வரும் சூழலில், பல்வேறு நாடுகளில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக, 410 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

தமிழகத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மாநில ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில், இரண்டரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தேர்தல் நேரத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

*c/o மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் மாணவர்கள், பெண்கள் என பலரும் பயனடைந்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<*

*ரயில் வழித்தடங்களில், வன விலங்குகள் விபத்துக்குள்ளாவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு. ராஜ கண்ணப்பன் தெரிவித்துள்ளார்.*

*கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுக்கரை ரயில்வழித்தடம் அருகே உள்ள வனப்பகுதியில், யானை உள்ளிட்ட வனவிலங்குகளின் நடமாட்டத்தை ட்ரோன்கள் மூலம் கண்காணிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.*

*>>>>>><<<<<*

*தமிழகத்தின் மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில், ஒருசில இடங்களில் இன்றும் நாளையும் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இதனிடையே, தமிழக கடலோரப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.*

*>>>>>><<<<<*

***இருவரிச் செய்திகள்***

*ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் இடையேயான போரை, அமைதி பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு கொண்டு வர பாகிஸ்தான் முன்வர வேண்டும் என்று ஆப்கானிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.*

*>>>>>><<<<<*

*நேபாளத்தில் நாடாளுமன்ற தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.*

*>>>>>><<<<<*

*பிரேஸிலில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 68ஆக அதிகரித்துள்ளது.*

*>>>>>><<<<<*

*கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி இயக்கம், மகளிரின் சுகாதாரத்தை மேம்படுத்தும் அரசின் முக்கிய நடவடிக்கை என்று தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் எம். ஸ்ரீநிவாஸ் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<*

*தென்னாப்பிரிகா - ஜிம்பாப்வே உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு, தில்லியின் சில இடங்களில், இன்று பிற்பகல் 3 முதல் இரவு 10 மணிவரை போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளனர்.*

*>>>>>><<<<<*

*மும்பை, செம்பூரில் உள்ள சுபாஷ் நகரில் கட்டடப்பட்டு வரும் அடுக்குமாடி கட்டிடத்திலிருந்து தவறி விழுந்ததில் தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார்.*

*>>>>>><<<<<*

*சென்னையில் 4 கோடி ரூபாய் செலவில் கட்டடப்பட்டுள்ள தமிழ்நாடு கொள்கை மற்றும் ஆளுகை அனுபவ கற்றல் மையத்தை மாநில துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.*

*>>>>>><<<<<*

*சேலத்தில், இருசக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிய வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.*

*>>>>>><<<<<*

*கடலூரில் அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில மொழி பேச்சு, கிராமிய நடனம், பரதம் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டது.*

*>>>>>><<<<<*

நெல்லை மாவட்டம், முண்டந்துறை வனச்சரகத்தில் இயற்கையை பாதுகாப்பது குறித்த, பள்ளி மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

>>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று வெஸ்ட் இண்டீஸை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி, இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<